ஸ்ரீ சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 1–ம் தேதி திருவள்ளுவராண்டு 2054 (2023–ம் ஆண்டு அக்டோபர் 18–ம் தேதி) புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவசரக்கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. மேற்படி, நகர்மன்ற கூட்டத்திற்கு அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது வருகை தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பட்டுக்கோட்டை.<br>
நாள்:13.10.2023

நகர்மன்றத் தலைவர்<br>
பட்டுக்கோட்டை நகராட்சி

**பொருள் எண்:1**

இந் நகராட்சி பொது சுகாதார பிரிவில் 2023 ம் ஆண்டிற்கான பிறப்பு இறப்பு CRS முறையில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

| S. no | Jan / 23 | | Feb / 23 | | Mar / 23 | | April / 23 | | May / 23 | | June / 23 | | July / 23 | | Aug / 23 | | Sep / 23 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Birth | Death | Birth | Death | Birth | Death | Birth | Death | Birth | Death | Birth | Death | Birth | Death | Birth | Death | Birth | Death |
| 2. | 247 | 43 | 337 | 44 | 331 | 43 | 346 | 51 | 308 | 49 | 395 | 50 | 370 | 43 | 361 | 32 | 276 | 31 |

மேற்படி பிறப்பு இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது, மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்..654..** பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்:2**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் கடந்த 27.03.2023–ம் தேதியன்று அறிவிக்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் மகளிருக்கு ரூ.1000/– மாதந்தோறும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சிறப்பு செயலாக்கத்துறை ஏற்படுத்தப்பட்டு அரசாணை (நிலை) எண்..15, நாள்..10.07.2023–ன்படி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி 27.07.2023–ம் தேதியன்று கலைஞர் உரிமைத் திட்டம் விண்ணப்பம் பெறப்படும் பொருட்டு நகரின் முக்கிய பகுதிகளில் விளம்பர பலகை மூலம் தெரிவித்திடவும், மேலும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படும் பள்ளிக்கூடங்கள் மற்றும் சமுதாய கூடங்கள் உள்ள இடங்களில் பொதுமக்கள் அமரும் வகையில் நிழல் வசதி ஏற்படுத்திட பந்தல் மற்றும் போதிய நாற்காலிகள் ஆகியவற்றை நகராட்சி அமைப்புகள் ஏற்படுத்திட வேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு விளம்பர பலகை மற்றும் பந்தல், நாற்காலி போன்ற வசதிகளை ஏற்படுத்திட அவசர அவசியம் கருதி செலவினம் ரூ.1,41,333/– மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட செலவினம் ரூ.1,41,333/– மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு : | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் : 3174/2023/எப்1)<br>2. அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். |

**தீர்மான எண்..655..** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:3**

தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்துவது மற்றும் நகர மேலாண்மை மையம் அமைத்தல், மேலும், தூய்மை பணியாளர்களுக்கான வளர்ச்சி திட்ட இயக்கத்தின் சார்பில் அவர்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியமாக நடத்துதல் போன்ற காரணங்களுக்காக முழு வடிவிலான கணக்கெடுப்பு செய்து கணினி மயமாக்குதல் அவர்களுக்கு பயிற்சி அளித்து மாற்று வழியில் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் அரசு திட்டங்களில் பங்கேற்க செய்தல் இன்னும் பிற வழிகளில் அரசு திட்டங்களின் வாயிலாக அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழிகாட்டு நெறிமுறைகளுடன் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்(3டி) 16, நாள்..09.10.2023 தேதியிட்டது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்..656.. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:4**

நமக்கு நாமே திட்டம் **–2023–24 –**ஆம் ஆண்டின் கீழ் நீர்நிலைகள் சீரமைத்தல் பணிக்கு **50** சதவீதம் பங்கு தொகை செலுத்த வேண்டும்**.** பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், தெரு விளக்கு, மழைநீர் வடிகால் அமைத்தல், சாலைகள் அமைத்தல்,அரசு கட்டிடங்கள் சீரமைத்தல் போன்ற திட்டப்பணிகளை மேற்கொள்ள பொது மக்களிடமிருந்து மூன்றில் ஒரு பங்கு பங்களிப்பு தொகையாக பெறப்பட வேண்டும் என அரசாணை (பல்வகை) நிலைஎண்**.**71, நாள்**.**13.09.2021**–**ல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் பணிகள் மேற்கொள்ள ஐந்தில் ஒரு பங்கு பங்களிப்பு தொகை பெறப்பட வேண்டும் என அரசாணை (பல்வகை) நிலைஎண்**.130**,நாள்**.02.12.2022–**ல் தெரிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ள என நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப் படுகிறது

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பார்வையீட்டு பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.610 /2021 /இ1) |

**தீர்மான எண்..657.. பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:5

பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு–C பிளாக்–22, நகரப்புல எண்கள்..514/5, 544/2, 544/3 ஆகியவற்றிற்குறிய பரப்பளவு முறையே 49658.40 ச.அடி, 10018.80 ச.அடி மற்றும் 5372.40 ச.அடி ஆக மொத்தம் 65049.60 ச.அடி பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க நகர் ஊரமைப்பு துறையால் அதன் உரிமையாளராகிய வீ.புவனேஸ்வரன் த/பெ. வீராச்சாமி அவர்களின் அதிகார முகவரான திரு.M.பழனியப்பன் த/பெ. திரு. முத்துசாமி விண்ணபித்திருந்தார்.

மேற்கண்ட விண்ணபதினை கூராய்வு செய்து உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, தஞ்சாவூர் அவர்களின் கடிதம், ந.க.எண்..DX36PZNM (14563/2023/TD2/2023 /TCP), நாள்..19.08.2023 என எண்ணிட்டு சாலை அமைப்பு வரைபடத்திற்கு அனுமதி அளித்துள்ளார். மேற்கண்ட மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு துறையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைக்கான 1932.54 ச.மீ., பொது உபயோகத்திற்கு 22.89 ச.மீ. மற்றும் மூலை முடுக்கத்திற்கு 5.62 ச.மீ ஆகியவற்றை இனாம் சாசனம் ஆவண எண்..1893/2023 மற்றும் 2093/2023 வாயிலாக நகராட்சிக்கு கொடுத்துள்ளார். மேலும் நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண்..DX36PZNM(14563/2023/TD2/2023/TCP), நாள்..19.08.2023–ன்படி இந்நகராட்சி ஆணையர் பெயரில் 24.63 ச.மீ. இடத்தினை தான பத்திரம் ஆவண எண்..1892/2022 வாயிலாக ஒப்படைப்பு செய்துள்ளார்.

மேலும் சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால், மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்டு குடிநீர் பகிரமானத்திற்கான குழாய்கள் அமைப்பதற்கான கட்டணமாக பொறியாளர் அளித்துள்ள கேட்பின்படி ரூ.1,20,000/–ஐ செலான் எண்..106/01/4/23–24/0006020, நாள்..09.10.2023–ம் தேதியன்று செலுத்தியுள்ளார். மனைப்பிரிவுக்கு உரிய தேவையான மின் கம்பங்கள், மின் கம்பிகள் மற்றும் விளக்குகள் அமைப்பதற்கான தொகை ரூ.1,81,070/–ஐ, இரசீது எண்..DGCCAN571670596, நாள்..12.10.2023 வாயிலாக மின்சார வாரியத்திற்கு செலுத்தியுள்ளார்.

மேற்கண்டவாறு சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டதால், நகராட்சி வசம் எடுத்து கொள்ளலாம் என பொறியியல் பிரிவில் தெரிவித்துள்ளனர்.

மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவில் உள்ள சாலைகள், பொது உபயோக இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை ஏற்று நகர் ஊரமைப்பு துறை, தஞ்சாவூர் ம.வ/ந.ஊ.உ.இ(தமா) எண்..SWP/57/2023 என எண்ணிட்ட வரைபடத்திற்கு தொழில்நுட்ப அனுமதி, ந.க.எண்..DX36PZNM (14563/2023/ TD2/2023/TCP), நாள்..12.10.2023 தேதிய கடிதத்தின் வாயிலாக வழங்கியுள்ளார்.

எனவே, மேற்கண்டவாறு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள், பொது உபயோக இடம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை ஏற்று மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்...3317/2023/எப்1)**

**தீர்மான எண்..658..** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:6**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் முதிர் கொசுக்களால் ஏற்படும் நோய்களான டெங்கு காய்ச்சல் சிக்கு யா போன்ற நோய்களை தடுக்கும் பொருட்டும் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நிலவேம்பு பவுடர் தற்சமயம் இருப்பு குறைவாக உள்ளதால் டாம்கால் (TAMCOL) அண்ணா மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை–600 106 என்ற நிறுவனத்திடமிருந்து 250Kg. நிலவேம்பு பவுடர் வாங்கி வழங்கிடவும் அதற்குரிய உத்தேச செலவினத்தொகை ரூ.1,30,652/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்தி இரண்டு மட்டும்) ஆகும். மேற்படி TAMPCOL நிறுவனத்திற்கு முன்னேற்பாடாக வரைவு காசோலை அனுப்ப வேண்டி உள்ளதால் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசியம் கருதி மேற்காணும் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்..659..** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:7**

இந்நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி வசம் இரண்டு ஆயில் எஞ்சின்கள் மழை நீரை வெளியேற்றுவதற்கு நகராட்சியில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஆயில் இஞ்சின் பழுதடைந்துள்ளதால், ஆயில் இஞ்சின் பழுது நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. ஆயில் இஞ்சின் பழுது நீக்கம் செய்ய உத்தேச செலவினம் ரூ,25,000/– (இருபத்து ஐந்தாயிரம்) ஆகும். எனவே மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்..660.. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:8

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொசுப்புழுக்களை ஒழிக்கும் பொருட்டு (B.T. POWDER) பேசிலாஸ் துரிஞ்சியான்ஸ் பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கொசுப்புழு ஒழிப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் PLASTIC SPRAYER ஆகும். இதனால் SPRAYER அடிக்கடி பழுது ஏற்பட்டு கொசுப்புழு ஒழிப்பு பணி தடைப்படுகிறது. ஆகையினால் பித்தளையால் தயார் செய்யப்பட்ட (SPRAYER) 12 எண்ணிக்கை வாங்கி வழங்கும்படி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. உத்தேச செலவினத்தொகை ரூ.2,50,000/- இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ஆகும். எனவே, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்..661.. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:9

இந்நகராட்சி 33 வார்டுகளில் பொது சுகாதார பிரிவில் தூய்மை பணியாளர்களை கொண்டு, வீடு வீடாக மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரிக்கப்பட்ட, மக்கும் குப்பை (MCC) நுண் உர செயலாக்க மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, இயந்திரத்தில் அமைக்கப்பட்டு தொட்டிகளில் சேமிக்கப்பட்டு இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. இவ்வாறு இயற்கை உரம் தயாரிக்கப்படும் இயந்திரம் 5 இடங்களில் செயல்பட்டு வருகிறது. தற்போது, அண்ணாகுடியிருப்பு, சுப்பையா பிள்ளை தெரு, ஜானகி ராமன் நகர் இயந்திரம் பழுதாகி குப்பை சரியாக அரைக்கபடாமல் உள்ளது, இயந்திரம் பழுது நீக்கம் செய்யப்பட வேண்டும், எனவே, தற்போது அவசர அவசியம் கருதி 3 (MCC) நுண்உர செயலாக்க மைய இயந்திரத்தினை பழுது நீக்கம் செய்திடவும், மேலும் இதற்கான உத்தேச செலவினம் 1.5 லட்சத்திற்கு (ஒன்றரை லட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்..662.. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்:10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 16.09.2023–ம் தேதிய கடிதம் மற்றும் காணொளி ஆய்வுக்கூட்டத்தில், பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களில் தற்போது நடைமுறையில் உள்ள மூன்றாண்டு குத்தகையினங்கள் மற்றும் 9 ஆண்டு குத்தகையினங்களில், முறையற்ற மற்றும் நீக்கம் செய்ய வேண்டிய வரியில்லா இனங்களில் உள்ள குறைபாடுகளை களைவதற்கு ஏதுவாக வரியில்லா இனங்களில் உள்ள மொத்த கேட்பு பட்டியலை கணினி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட வரியில்லா இனங்களின் கேட்பு பட்டியலுடன் ஒப்பிட்டு சரி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.559/2023/அ2, நாள்.09.10.2023–ன்படியும் மற்றும் காணொளி ஆய்வுக்கூட்டத்தின்படியும், மேற்கண்ட பொருள் தொடர்பாக வரியில்லா இனங்களில் உள்ள குறைபாடுகள்/குளறுபடிகள் ஆகியவற்றை சரிசெய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில் இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.4689/2023/அ2, நாள்.29.09.2023–ன்படி பட்டுக்கோட்டை நகராட்சியில் 2023–24–ம் நிதியாண்டில் அனைத்து குத்தகை இனங்களில் நடைமுறையில் இல்லாத குத்தகையினங்களை கண்டறிந்து, UTIS–லிருந்து நீக்கம் செய்திட, நேரடியாக கள ஆய்வு செய்வதற்கு மேலாளர், வருவாய் ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியவர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில் கீழ்கண்ட விவரப்படி, இரட்டிப்பு கேட்புகள், பூஜ்ஜியம் கேட்புகள் மற்றும் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பழைய கேட்புகள் ஆகியவற்றை நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | வரியில்லா இனங்களில் உள்ள மொத்த கேட்பு பட்டியலில் உள்ள இனங்களின் எண்ணிக்கை | 248 |
| 2 | பட்டுக்கோட்டை நகராட்சி கணினி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட கேட்பு பட்டியலில் உள்ள இனங்களின் எண்ணிக்கை | 180 |
| 3 | மேற்கண்ட இரண்டு கேட்பு பட்டியல்களுக்கும் உள்ள வித்தியாசம் | 68 |
| A | இரட்டிப்பு கேட்புகள் | 4 |
| B | கேட்பு பட்டியலில் உள்ள பூஜ்ஜியம் கேட்புகளின் எண்ணிக்கை | 53 |

அலுவலகக்குறிப்பு: வரியில்லா இனங்களின் பூஜ்ஜிய கேட்புகள் பட்டியலிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.4989/2023/அ2)

**தீர்மான எண்..663.. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

ஒம் / S. சண்முகபிரியா, எம்.சி.ஏ.,
நகர்மன்ற தலைவர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி.